அரசுப் பொதுத்தேர்வு - மே 2022

10 ஆம் வகுப்பு - தமிழ்

விடைக்குறிப்பு.

1) ஆ.மணிவகை

2) ஆ. கொளல்வினா

3) அ. காடு

4) ஈ. சிலப்பதிகாரம்

5) ஆ. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்

6) இ. தொடர்மொழி

7) அ.வனத்தின் நடனம்

8) அ. புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை.

10) ஈ.சிலப்பதிகாரம்

11) ஈ. கால் உடை - காலால் உடைத்தல்

12) இ. எம் + தமிழ் + நா

13) அ. பண்புத்தொகை

14) ஆ. தமிழ் மொழியை

15) இ. வேற்றுமொழியினர்

16) உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக்கட்டுக்கு அப்பாற்பட்ட வடிவம். தமிழில் அறிமுகப்படுத்தியவர் பாரதியார். எளிய வடிவில் அமைந்த வடிவம்.

17) அ - சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலம் ம.பொ.சி எத்தகைய அறிவு பெற்றார் ?

ஆ - எந்த ஆண்டு வ.உ.சி ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார் ?

18) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிவன- அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு - உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்பு வாய்ந்தது.

19) சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி

20 ) நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி

21) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்.

22) அ - பண்புத்தொகை , இன்சொல் பேசுவது நன்மை தரும்.

ஆ- வினைத்தொகை , எழுகதிரைக் கண்டவுடன் தாமரை முகம் மலர்ந்தது.

23) வாழ் + க, வாழ் - பகுதி, க- வியங்கோள் வினைமுற்று விகுதி

24) அ. பள்ளி விடுமுன் வீடு செல்லக்கூடாது

25) வெண்பா - செப்பலோசை, ஆசிரியப்பா - அகவலோசை

26) அ- நம்பிக்கை ஆ - மெய்யியலார்

27) வரும் கோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்வேன்.

28) தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை

தேறும் சிலப்பதி காரமதை

ஊணிலே எம்முயிர் உள்ளளவும் நிதம்

ஓதி யுணர்ந்தின் புறுவோமே.

29) கத்தரிநாற்று நடவு செய்தேன்

தென்னம்பிள்ளை தோட்டத்தில் நட்டேன்.

பனைமடலி வெளியே தெரிகிறது.

30) அ. அறம் கூறும் மன்றங்கள்

ஆ. அறம் அறங்கண்ட நெறிமான் அவையம்

இ. துலாக்கோல் போல நடுநிலை மிக்கது

31) புத்தகம் வாங்க போதிய பணம் இல்லாததால் குறைந்த விலைக்குப் பழைய புத்தகக் கடைக்குச் சென்று நூல் வாங்குவார்.. உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்கள் வாங்கிவிட்டுப் பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.

32) கம்பர் இயற்றிய நூல் , இராமனது வரலாற்றைக் கூறும் நூல்.

ஆறு காண்டங்களை உடையது. இந்நூலுக்குக் கம்பர் இட்டபெயர் இராமாவதாரம்.

33) அழகாய் அமைந்த அன்னை மொழி - பழமைக்குப் பழமையானது, புதுமைக்குப் புதுமையான மொழி- குமரிக்கண்டத்தில் நிலைத்து, மண்ணுலகை அரசாண்ட மொழி. பாண்டியன் மகளாய்ப் பிறந்த மொழி - திருக்குறளின் பெருமையாய் விளங்குவது.

34) நவமணி வடக்க யில்போல்

நல்லறப் படலைப் பூட்டும்

தவமணி மார்பன் சொன்ன

தன்னிசைக்கு இசைகள் பாடத்

துவமணி மரங்கள் தோறும்

துணர்அணிச் சுனைகள் தோறும்

உவமணி கானம்கொல் என்று

ஒலித்து அழுவ போன்றே

35) தண்ணீர்த்தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ( தண்ணீரை உடைய தொட்டி )

குடிநீர் - வினைத்தொகை, சுவர்க்கடிகாரம் - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை, மல்லிகைப்பூ - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

36) தீவகம் - விளக்கு

செய்யுளில் ஓரிடத்தில் வந்த சொல் பல இடங்களுக்கும் சென்று பொருந்திப் பொருள் விளக்குவது தீவக அணி

எ- கா. கல்லும் உறுத்தாது காலில்முள் தையாது

எல்லைமார்த் தாண்டன்சூ டேறாது........

| | | |
|---|---|---|
| 37) கருவியும் | - நிரை, நிரை | - கருவினம் |
| காலமும் | - நேர், நிரை | - கூவிளம் |
| செய்கையும் | - நேர், நேர், நேர் | - தேமாங்காய் |
| செய்யும் | - நேர், நேர் | - தேமா |
| அருவினையும் | - நிரை, நிரை, நேர். | - கருவிளங்காய் |
| மாண்ட | - நேர், நேர். | - தேமா |
| தமைச்சு | - நிரைபு. | - பிறப்பு |

அ) தாயின் மறைவுக்குப்பின் தன் மலர்க்கையைக் குவித்து, பூமித்தாயே என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக என்று கூறிக் குழியினுள் அழகிய மலர்ப் படுக்கை அமைத்தார் - என் தாய் சொன்ன மணிபோன்ற உண்மைச் சொற்களை மழைநீராகக் கொண்டு வளர்த்து அன்னையின் மார்பில் மணிமாலை என அசைத்து அழகுற வாழ்ந்தேன். - மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல் என் மனம் வாடுகிறது - வலித்துயரம் என்னைப் பற்றியுள்ளது.- துணையைப் பிரிந்த பறவைபோல வருந்தும் நான் இக்காட்டில் வழி தெரியாமல் அலைகிறேன்.

( அல்லது )

ஆ). கவிஞர், பின்னர் வருவதை முன்னரே அறிந்து கூறுபவர்.

உள்ளக் கருத்தை இனிய கவிதையாய் படைப்பவர் - கடவுளுக்கு இணையானவர் - புகழ்ச்சி, இகழ்ச்சியை விரும்பாதவர்.

39) அ -

அன்புள்ள தாத்தா,

நலம், நலமறிய ஆவல் நாடெங்கிலும் பெருந்தொற்று வேகமாகப் பரவி வருகிறது. நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டாம். தேவை ஏற்படின்

உரிய பாதுகாப்போடு செல்லவும். கூட்டம் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். வீட்டு உணவை மட்டுமே உட்கொள்ளவும்.

நன்றி.

ஆ)

அனுப்புநர் :

ஊர்ப்பொதுமக்கள்,

அஅஅஅ.

பெறுநர். :

மின்வாரிய அலுவலர்,

ஆஆஆஆஆ.

ஐயா,

பொருள் : பழுதடைந்த மின்விளக்குகளைச் சரிசெய்ய வேண்டி

வணக்கம், எங்கள் பகுதியில் பலநாட்களாக மின்விளக்குகள் பழுதடைந்துவிட்டன. இதனால் அப்பகுதியே இருளாக உள்ளது. இதனால் இரவில் வாகனங்களில் செல்வோர் பள்ளத்தில் விழுந்து துன்பப்படுகின்றனர். ஆகவே விரைந்து பழுதடைந்த மின்விளக்குகளை சரிசெய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

40) படத்திற்குப் பொருத்தமான நயங்கள் ஐந்து எழுதியிருப்பின் மதிப்பெண்

41 ). பெயர் : குணசேகரன்

பாலினம் : ஆண்

பிறந்த தேதி : 16-3-2008

முகவரி. : 21, வ.உ.சிதம்பரனார் தெரு, கரூர்

11 ஆம் வகுப்பு சேர்க்கை

அரசு மேல்நிலைப்பள்ளி,

42) சரியான மொழிபெயர்ப்பு இருப்பின் மதிப்பெண்

43) அ - சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே - அறமே மனிதனின் அடையாளம் - அறத்தின் வழி பொருளீட்டி இன்பமுடன் வாழ வேண்டும். அறம் தவறினால் வாழ்வு நிலைக்காது

44) அ, ஆ - துணைப்பாட கதை பகுதிகள்

45) அ, ஆ

குறிப்புச் சட்டகம்

முன்னுரை

பொருளுரை

முடிவுரை.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்,

பட்டதாரி ஆசிரியர், தி.ஆ.மேனிலைப்பள்ளி

திருவிடைமருதூர் - செல் 9443740120.